**பன்வில பிரதேச சபை - 2024**

-----------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

பன்வில பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள்

தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கணிப்பீட்டு நடவடிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதாக. | கணிப்பீடொன்று மேற்கொண்டு சொத்துக்கள் இணங்காணப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,517,246 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 3,339,713 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | <br>பட்டியலிடப்பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | <br>பட்டியலிடப்பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,492,000 | 1,485,641 | 1,788,140 | 586,388 | 1,473,500 | 1,487,756 | 1,727,818 | 888,886 |
| (ii) | வாடகை | 4,649,650 | 2,123,251 | 2,412,901 | 5,872,250 | 7,216,920 | 4,316,650 | 2,979,450 | 6,161,900 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,196,800 | 2,137,686 | 2,853,795 | 546,475 | 2,100,000 | 1,245,645 | 1,093,654 | 1,262,584 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,635,855 | 11,119,764 | 11,546,935 | 5,523,693 | 9,496,860 | 8,744,508 | 8,871,449 | 5,950,864 |
| | | 18,974,305 | 16,866,342 | 18,601,771 | 12,528,806 | 20,287,280 | 15,794,559 | 14,672,371 | 14,264,234 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

**சபையின் வருமன சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 520,772 ஆக இருந்தது. அதில் ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 இணை மிகைத்த 18 வீத வரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 136,458 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| சபைக்குரிய பொது வியாபார கடைத்தொகுதியில் 03 கடைகள் தொடர்பாக முன்னாள் தலைவரால் வழக்கு தொடருவதை இடை நிறுத்தியதன் காரணமாக அம்மூன்று கடைகளில் நிலுவை வாடகை ரூபா 584,100 ஐ அரவடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது இருந்தது. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதாக. | நிலுவை கடை வாடகை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதிகள் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 1,098,814 ஆக இருந்தது அதில் ஓர் அலகு நீர் கட்டண நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 87 நீர் பாவனையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 672,386 ஆன நீர் கட்டண நிலுவையொன்றை அறவிடுவதற்கு | செயற்படாத திட்டங்களின் நிலுவையை பதிவழிக்கவும் ஏனைய நிலுவைகளை அரவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நீர் வசதிகள் நிறுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்காக மாற்றுவழி நீர் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அத்தோடு மீலாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை நீர் கட்டண மீதியில் அலகொல்ல ஜனபத கிராமம் மற்றும் அலகொல்ல கம்உதாவ ஆகிய செயற்திட்டங்களுக்குஉரிய நிலுவை ரூபா 540,080 ஆக இருந்தது அப்பிரதேச மக்களுக்கு முறையாக நீர் வழங்கள் வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் 2023 மே முதல் இந்த இரண்டு செயற்திட்டங்களுக்காக நீர் கட்டணம் பட்டியலிடலும் நிறுத்தப்பட்டிருந்தது. | | வழங்கள் முறைமை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,109,300 ஆக இருந்தது. இதனுள் 2017 – 2018 காலப்பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 488,000 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதா. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,204,845, ஆக இருந்தது. அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 627,277ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 345, 278ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகளைத் அறவீடு செய்ய வேண்டும். |

### 3.2 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,404,748 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த நக்கில்ஸ் விடுமுறை கேந்திரம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் விளைவவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது இக்கட்டிடம் சுற்றுலா கவர்ச்சியை பெற்று வருமானம் உழைக்கும் | எதிர்வரும் ஆண்டின் போது குறித்த ஆதனங்களை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | குறைபாடுகளை நிவர்த்தி செய்து சொத்துக்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வருமானம் உழைக்க |

| | | |
|---|---|---|
| நோக்கமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் நோக்கத்துக்கு உட்படுத்த செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் கட்டிடம் அழிவடைவதற்கு இடமளிக்கக்கபட்டிருந்தது. | | வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,006,250 கூட்டுத்தொகையான 04 சனசமுக மண்டபங்கள் 2 மயான பூமிகள் மற்றும் நக்கல் சுற்றுலா கட்டிடம் அமைந்துள்ள காணி மற்றும் ரூபா ஆன 160,000 மோட்டார் சைக்கிள் என்வற்றின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 14,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 13,087,407 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு நக்கல் சுற்றுலா பயணிகளுக்காக வசதிகளை வழங்கும் விருந்தோம்பல் இல்லம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தக்காரர்களால் ரூபா 5,866,560 ஆன வேலை பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் நிதி வழங்காத காரணத்தினால் செயற் திட்டத்தின் எஞ்சிய வேலை பகுதிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தன. நிறைவேற்றப்பட்ட வேலை பகுதிக்காக 2023 மே 29 ஆம் திகதி ரூபா 5,182,221 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடு வழங்கப்படும் என்ற இணக்கப்பாட்டின் பேரில் எஞ்சிய வேலைப்பகுதியைப் பூர்த்தி செய்வதற்காக 2024 இறுதி காலாண்டின் போது ரூபா 17,272,967 இற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பகிரங்க கேள்வி கோரல் இடம் பெற்றிருந்தது. நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்வதில் தாமதம் காரணமாக கேள்விதாரர்கள் முன்வராதிருந்ததுடன் திட்டம் மீளாய்வாண்டின் போதும் பூர்த்தி செய்வதற்கு முடியாது போனமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,182,221 தொகை பலனற்ற செலவினம் ஒன்றாக இருந்தது. | திட்டத்தை நிறைவேற்று வதற்கு போதியளவு காலம் இல்லாமல் இருந்ததால் விளைவற்று காணப்படுவதாக. | குறைபாடுகளை பூர்த்தி செய்து கட்டிடங்களை பயன்பாட்டிற்கு செயற்திறனாக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 06 பதவிகளில் 10 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 04 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் கொள்கை தீர்மானத்தின் பேரில் வெற்றிடங்களாக இருப்பதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக பேணிச் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் 2020 ஆம் ஆண்டில் மரணித்த இரண்டு ஊழியரகளிடம் இருந்தும் மொத்தம் ரூபா 555,919 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்கவில்லை. | அருகிலுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படுவ தாக. | சபை மூலம் பிரதேச பொதுமக்களின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 78 (1) பிரிவின் பிரகாரம் பொது சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சபைக்குரிய 03 நீர் செயற்திட்டங்களில் நீர் சுத்திகரிக்கப்படாமல் குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | 04 நீர் செயற்திட்டங்களில் நீர் தரமானதாக உள்ளதாக. | நீர் மாதிரி பரீட்சிக்கப்பட்டுநீர் சுத்திகரிக்கப்பட்டு சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவருத்திச் சட்டத்தின் விதிகளின் படி, சபையால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை அடைய நடவடிக்கை எடுக்கவில்லை. | நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதாக. | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |